பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: ஐப்பசி 27 (12—11—68) செவ்வாய் ★ வெளியூர்: ஐப்பசி 28 (13—11—68) புதன் [இதழ்: 122

துணைவேந்தராகப் பழங்குடி மகன்!

இந்தியாவிலேயே முதல் நிகழ்ச்சி

ஐதராபாத், நவ 12—

இந்தியாவிலேயே முதன்முதலாக ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக எல். புல்லையா என்ற தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் தற்போது கல்வித் துறை இயக்குநராக இருக்கிறார்.

'தமிழ்நாடு' பெயர் மாற்ற மசோதா

நாடாளுமன்ற நடப்புக் கூட்டத்தில் வருகிறது

சென்னை, நவ 12—

'சென்னை மாநிலம்' என்ற பெயரை, 'தமிழ்நாடு' என்று சட்டபூர்வமாக மாற்றுவதற்கான மசோதா, நாடாளுமன்றத்தின் இந்தத் தொடர்க் கூட்டத்தில் கொண்டுவரப்படுகிறது.

தமிழ்நாட்டின் பெயர், அரசியல் சட்டத்தில் 'சென்னை மாநிலம்' (மெட்ராஸ்-ஸ்டேட்) என்றுதான் உள்ளது; இதன் காரணமாக, நடைமுறையில் 'தமிழ்நாடு' என்று பேசப்பட்டுவந்தாலும் கூட, ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும்போது, 'சென்னை மாநிலம்' என்ற பெயரே பயன்படுத்தப்படுகிறது.

"அரசியல் சட்டத்தில் உள்ள பெயரையும் 'தமிழ்நாடு' என்று மாற்றவேண்டும்" என்று தமிழகச் சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பியது.

இதையொட்டி, 'தமிழ்நாடு' என்று மாற்றுவதற்கு வகை செய்யும் சட்டத் திருத்தத்தை டெல்லி அரசு தயாரித்திருக்கிறது; இந்தச் சட்டம், நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்.

மதுரையில் சுகாதாரப் பணி

அமைச்சர் சாதிக்பாட்சா தெருக் கூட்டினார்

மதுரை, நவ. 12—

மதுரை நகரில், சுகாதார விழா வினையொட்டி நடைபெற்ற பொது கூட்டத்திற்குப்பின், மதுரை நகர வீதிகளைத் துப்புரவு செய்யும் பணி துவங்கிற்று.

அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், கூட்டுக்கோல் பிடித்துத் தெருக் கூட்டினார்.

மதுரை மாவட்ட தி மு க. செயலாளர் எஸ். முத்து, சட்டமன்ற உறுப்பினர் சி. கே. விந்தராசன் ஆகியோரும் தெருக் கூட்டினர்.

கப்பல் துறைப் போக்குவரத்து

அரித்துவார், நவ 12—

"ரூ. 340-கோடி செலவிடக்கூடிய ஒருங்கிணைந்த கப்பல் துறை வளர்ச்சித் திட்டம் ஒன்றை, கப்பல் போக்குவரத்துத் துறை செயல்படுத்திவருகிறது"

என, போக்குவரத்துத் துறையமைச்சர் டாக்டர் வி. கே. ஆர்.வி. ராவ், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"1980-ஆம் ஆண்டில் ஒரு கோடி டன் அளவுக்குக் கப்பல் போக்குவரத்து நடைபெறும்" என்றார் அவர்.

அடுக்கிவைத்த புத்தகங்களை எடுப்பாரில்லை!

அச்சானதில் பாதிக்குமேல் குப்பைக்காகிதங்களாயின!

'அரசாங்க வெளியீடு' என்பதன் பேரால் பொதுப் பணம் பாழாக்கப்படும் வேதனை

டில்லி அரசின் வாடிக்கையான நிகழ்ச்சி--பொதுக் கணக்குக் குழு கடும் கண்டனம்

புதுடில்லி, நவ. 11—

அரசாங்க வெளியீடுகளின் பெயரால், மத்திய அரசு வீண் டணவிரயம் செய்திருப்பதை, நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விரயத்தைக் குறைப்பதற்காக, தனியார் அச்சகங்களின் துணையை நாடுமாறு அது பரிந்துரைத்திருக்கிறது.

பொறுப்பற்ற தன்மையிலும், தேவையற்ற முறையிலும் அச்சகச் செலவுக்காகச் செய்யப்படும் விரயத்தைத் தவிர்க்க வேண்டும் எனறும் குழு கருத்தறிவித்திருக்கிறது.

மத்திய அரசின் வெளியீட்டுத் துறையால் அச்சிடப்பட்டு விற்பனையாகாமல் முடங்கியுள்ள வெளியீடுகளின் மதிப்பு 1962--63-ல் ரூ 65 68 இலட்சமாக இருந்தது; 1964--65-ல் அது, ரூ. 80 19 இலட்சமாக உயர்ந்தது.

1962--63-க்கும் — 1964--65-க்குமிடையே வெளியீட்டின் பேரால் ரூ. 10.27 இலட்சம் பாழாக்கப்பட்டது; அதாவது, விற்பனையாகாமல் முடங்கிக்கிடந்த வெளியீடுகள் அகற்றப்பட்டன. இதே போல், பல தடவைகளில் அச்சிடப்பட்ட பிரதிகளில் பாதிக்குமேல் வீணாயின. ஐ.ஏ.எஸ். தேர்வுக்காக அச்சிடப்பட்ட அறிக்கைகள் (துணை வெளியீடு) மட்டும் 93 சதவிகிதத்துக்குமேல் பயன்படுத்தப்படாமலே வீணாயின.

இப்படி, தேவைக்குமேல் வீணாக அச்சிடப்படுவது தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. ஒரு துறை—இரண்டு துறை என்றில்லாமல், அநேகமாக எல்லா அமைச்சகங்களும், அரசுத் துறைகளுமே வாடிக்கையாக, பணத்தைப் பாழாக்கும் இந்தச் செயலில் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன என்பதைப் பொதுக் கணக்குக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையாகத் தேவைதானா என்பதைக் கண்டறிந்து அச்சிடுவதற்கான 'ஆர்டர்' கொடுக்கும்படிக் குழு பரிந்துரைத்திருப்பதுடன், அச்சிடக் காலதாமதத்தைத் தவிர்க்கவும் யோசனை கூறியிருக்கிறது; 'காலதாமதத்தாலும் டண விரயம் ஆகிறது என்பதைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்க வெளியீடுகளின் விலைகளை நிர்ணயிப்பதில், அறிவுடம்பட்ட கொள்கை இருக்கவேண்டும் என்றும், வெளியீடுகளின் தரத்துக்கு ஏற்ப விலை நிர்ணயிக்கவேண்டும் என்றும், ஆண்டுதோறும் அவற்றைப் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் குழு பரிந்துரைத்திருக்கிறது.

"ஒவ்வொரு அமைச்சகமும், அரசுத் துறையும் அவ்வப்போது அரசாங்க வெளியீடுகளைப்பற்றிக் கண்ணோட்டம் செலுத்தி, ஒவ்வொரு வெளியீடும் எந்த அளவுக்குத் தேவை -- எவ்வளவு பயன்படுத்தப்பட்டிருக்கின்றன -- விற்பனை வாய்ப்பு எந்த அளவு உள்ளது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்" எனறு குழு வலியுறுத்தியுள்ளது.

வெளியீட்டுத் துறையில் பணம் விரயம் செய்யப்பட்டுள்ளதற்கான சில எடுத்துக்காட்டுக்களையும் குழு தந்துள்ளது.

'இராஷ்ட்ரீய பஞ்சாங்கம்' என்ற ஒன்றை விமானப் போக்குவரத்துத் துறை வெளியிடுகிறது.

'அஞ்சல் தலைகளின் மாதிரித் தொகுப்பு மலர்' என்ற ஒன்றை அஞ்சல் -- தந்தித் துறை வெளியிடுகிறது.

செய்தி -- ஒலிபரப்பு அமைச்சுத் துறையினால் குறைந்தது 5 வெளியீடுகளாவது வெளியிடப்படுகின்றன.

"இவையெல்லாம் வீண் பண விரயம் உண்டாக்குவதே தவிர, பயன்படுபவையல்ல"

என்பதைக் குழு சுட்டுக்காட்டியுள்ளது.

நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட பணத்துக்குமேல் பணம் செலவிடப்படுவதைக் குறைக்கத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதித் துறையைப் பொதுக் கணக்குக் குழு அறிவுறுத்தியுள்ளது.

"1955—56-ல் முறையே ரூ. 2.55 கோடி; ரூ. 1.99 கோடி மானியம் அனுமதிக்கப்பட்டிருக்க, ரூ. 5.09 கோடி; ரூ. 4.34 கோடி செலவிடப்பட்டிருக்கிறது"

என்பதையும், குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

நாடாளுமன்றம் அனுமதித்துள்ள மானியத் தொகையை விடக் கூடுதலாகத் தொகை கோரப்படுவதற்கான காரணத்தைக் கூற பல்வேறு துறைகளும் காலங்கடத்திவருவது குறித்தும் குழு வருத்தம் தெரிவித்துள்ளது.

இப்படி. அனுமதித்த அளவுக்குமேல் செலவிடுவதைக் குறித்து அமைச்சுத் துறைகள் கவலையற்றிருப்பதையும் கணக்குக் குழு கண்டித்துள்ளது.

50 இலட்சம் கடிதங்கள்!

அஞ்சலகத்தில் தேக்கம்

ஷில்லாங், நவ. 12—

அசாம் மாநிலம் முழுமைக்கும் பட்டுவாடா செய்யவேண்டிய கடிதங்கள் சுமார் ஐம்பது இலட்சத்துக்குமேல், கௌகாத்தி ஆர். எம். எஸ். அஞ்சலகத்தில் தேங்கிக் கிடப்பதாக அதிகாரபூர்வமாகத் தெரியவருகிறது.

அஞ்சல் துறை ஊழியர்கள் மேற்கொண்ட மெதுவாக வேலை செய்யும் இயக்கத்தினாலும், வடக்கு வங்காளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினாலும், இந்தத் தேக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கடிதங்களை விரைந்து பட்டுவாடா செய்யும் பொருட்டு இப்போது கௌகாத்தியில் அஞ்சல் துறை ஊழியர்கள், கூடுதல் நேரப் பணியை மேற்கொண்டிருப்பதாக அசாம் அஞ்சல் துறைத் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாகர்கோயில் இடைத் தேர்தல்

சன. 8-ல் வாக்குப் பதிவு

நாகர்கோயில், நவ. 12—

நாகர்கோயில் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதி நாள் டிச. 12 என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகவலை, கன்னியாகுமரி மாவட்டக் கலெக்டர், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இப்போது நாகர்கோவில் தொகுதி வாக்காளர்களின் எண்ணிக்கை 5,05,148 ஆகும்; அதாவது, பொதுத் தேர்தலின்போது இருந்ததைவிட 32,000 வாக்காளர்கள் அதிகமாகும்.

வேட்பு மனுக்கள் பரிசீலனை: டிச. 13.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் இறுதி நாள்: டிச. 16.

வாக்குப் பதிவு: சன. 8.

தேர்தல் முடிவு: சன. 11.

ரூ. 1,000 கோடி அந்நியச் செலாவணி நட்டமாயிற்று

டில்லியின் முன்யோசனையற்ற செயலால் ஏற்பட்ட இழப்பு

பம்பாய், நவ. 12—

"மத்திய அரசின் தவறான கொள்கைகளால் — போதிய **முன்யோசனையின்றி விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளின் காரணத்தால்** --- ரூ. 1,000 கோடி மதிப்புள்ள உருக்கை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து அந்த அளவுக்கு அந்நியச் செலாவணி, நாட்டுக்கு நட்டமாயிற்று"

என்று, டாடா உருக்காலை அதிபரான ஜே. ஆர். டி. டாடா, கட்டுரை ஒன்றில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கணக்கீட்டு இயந்திரத் திணிப்பு

முடிவில் மாற்றமில்லையாம்

புதுடில்லி, நவ. 12—

"ஆயுள்காப்பீட்டுக் கழகம் திறம்படப் பணியாற்றுவதற்கு 'கம்ப்யூட்டர்' கருவிகள் அவசியமாதலால், பம்பாயில் ஒரு 'கம்ப்யூடரு'ம், கல்கத்தாவில் ஒரு 'கம்ப்யூடரு'ம் வைப்பதென்ற முடிவை மறுபடியும் மாற்றுவது உசிதமல்ல எனக் கருதப்படுகிறது"

என்று மக்களவையில், துணை நிதியமைச்சர் ஜகன்னாத பகாடியா எழுத்து மூலம் பதில் தந்தார்.

இந்த இடங்களில் கம்ப்யூடர் வைப்பதென்று 1964-லேயேமுடிவு செய்யப்பட்டதென்றும், அதற்கு அரசு முழு ஒப்புதல் அளித்ததாகவும் அவர் கூறினார்.

‘கள்ள வணிகர்களின் கொள்ளை இலாபத்திற்கு வழிகோலாதீர்’

‘அரிசி விலையை ஒரு பிரச்சினையாக்கிப் பேசுவதால் ஏற்படும் விளைவை உணருவீர்’

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் வேண்டுகோள்

சென்னை, நவ. 12—

“அரிசி விலை ஏறிவிட்டது என்று சிலர் கூறுவது, வேண்டுமென்றே செய்யும் பிரசாரமாகும்; வழக்கமாக அக்டோபர் பற்றுக்குறை மாதமாகும்; அப்பொழுது விலை உயருவதுண்டு.

“அரிசி விலையை ஒரு பிரச்சினையாக ஆக்கிப் பேச வேண்டாம் என்று ஆளும் கட்சியினர் உட்பட எல்லா அரசியல் கட்சியினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

“விலையை ஒரு பிரச்சினையாக ஆக்கிப் பேசுவதால், கள்ளமார்க்கெட்டுக்காரர்கள் கொள்ளை இலாபமடிக்க வழிகோலப்பட்டு விடுகிறது.”

இவ்வாறு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடை பேசுகையில் சுட்டிக் காட்டி விளக்கினர்.

“குடும்பக் கார்டு முறை செயலில் உள்ள பகுதிகளில் அரிசி ரேஷன் வெட்டை நீக்கிவிடுமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது; இன்னும் 15 நாட்களில் முழு அளவு ரேஷன் கிடைக்கும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“மக்களுக்கு அரிசி வழங்க அரசிடம் போதிய கையிருப்பு இருக்கிறது; எனவே பற்றுக்குறை ஏற்படாது -- மக்கள் பீதியடைவதற்கு அவசியமே இல்லை” என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினர்.

“சில பகுதிகளில் பற்றுக்குறை இருந்தபோதிலும், பீதி ஏற்படுத்தப்படுவதில் அர்த்தமில்லை; விலையை உயர்த்திக் கொள்வதற்கு அந்தப் பீதி உதவும் என மீண்டும் ஒருமுறை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்” என்றும் அவர் வலியுறுத்திக் கூறினர்.

“சென்னை நகர மக்களுக்குப் புதிய ரேஷன் கார்டுகள், சனவரித் திங்களில் வழங்கப்படும்” என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், மேலும் இதுபற்றி விளக்கிக் கூறியதாவது:—

குறுகிய கால நெல் அறுவடையில் கொள்முதல் செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ள 4 இலட்சம் டன் குறியளவில் இதுவரையில் 1.6 இலட்சம் டன் கொள்முதலாகிவிட்டது; மேலும் கொள்முதல் தீவிரமாக நடந்தேறி வருகிறது. சனவரி 15-ந் தேதி அதாவது பொங்கல்வரை நிலைமையைச் சமாளிக்க முடியும்.

குறுவை நெல் ஈரப் பசையுடன் இருப்பதால், அதை அரைக்கும்போது, அரசு நிர்ணயித்த அளவுக்கு அரிசி கிடைப்பதில்லை என்பதால், தங்களுக்கு நட்டமேற்படுவதாக ஆலைக்காரர்கள் நெல் அரவையை நிறுத்திவிட்டதாகக் கூறுப்படுகிறது.

நெல் கொள்முதல் செய்வதில் ஆலைக்காரர்கள் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்.

செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில் அறுவடை தள்ளிப் போய்விட்டதாலும் விளைச்சல் தவறிவிட்டதாலும் உணவு நிலைமை மோசமடைந்திருக்கலாம். மேலும் பொதுவாக அக்டோபர், நவம்பர் மாதங்களில் உணவு பற்றுக்குறை ஏற்படுவது வழக்கம்; எனினும், நிலைமையைச் சமாளிக்க அந்த மாவட்டங்களுக்கு அரிசி விரைவாக அனுப்பப்பட்டு வருகிறது; இன்னும் ஒரு வாரத்தில் நிலைமை சீரடைந்துவிடும்.

சென்னையில் அரிசியின் தரம் மோசமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. மோசமான அரிசியைத் திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது. கொள்முதல் செய்யப்படும் அரிசி விரைவில் வழங்கப்படும்; ஆகவே, இனி நல்ல ரக அரிசி கிடைக்கும் -- விலையும் ஏருது.

தென்னாற்காடு மாவட்டத்தில் 10 ஆயிரம் டன்னும், திருச்சியில் 7000 டன்னும், மதுரையில் 5,000 டன்னும், நெலலையில் 6,000 டன்னும், கன்னியாகுமரியில் 3 500 டன்னும் அரிசி இதுவரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்திலும் கொள்முதல் மனநிறைவு தருவதாக இருக்கிறது.”

தோலிருக்க சுளை விழுங்கிகள்

விலை மதிப்புள்ள பொருட்கள் எங்கே?

அமைச்சர் பதவி வகித்தவர் ‘யோக்கியதை’ அம்பலம்!

பாட்ன, நவ. 10—

அரசுக்குச் சொந்தமான மேசை, நாற்காலி, சோபா வகைகள், மின்சாரச் சாதனங்கள் முதலியவை முன்னாள் அமைச்சர்கள் வசித்த அரசு மாளிகைகளிலிருந்து காணமற்போய்விட்டன.

பீகாரில் முன்னாள் அமைச்சர்கள் வாழ்ந்த மாளிகைகளில் உள்ள அரசுச் சொத்துக்கள் பற்றி கணக்கெடுத்தபோது இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள இத்தகைய பொருள்கள் காணவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

குளு குளு வசதி அளிக்கும் மின்சாரச் சாதனங்கள், விலையுயர்ந்த திரைச் சீலைகள், காஷ்மீர் கம்பளங்கள் முதலியவையும் இதில் அடங்கும்.

இன்னும் 15 நாட்களில் இவை என்ன ஆயின என்பதைத் தெரிவிக்குமாறு அந்தந்த மாளிகையில் வாழ்ந்த முன்னாள் அமைச்சர்களை மாநில அரசு கேட்டிருக்கிறது.

தற்போது பீகாரில் கவர்னர் ஆட்சி நடப்பது தெரிந்ததே.

காணமற்போன பொருள்களுக்கு அமைச்சர்களிடம் நட்ட ஈடு வசூலிக்கவும் ஏற்பாடு நடக்கிறது.

புதிய உருக்காலை

பொருளாதார ஆராய்ச்சிக் குழுவின் கருத்து

புதுடில்லி, நவ. 12—

தற்போது நாட்டில் உள்ள உருக்கு உற்பத்திச் சக்தி 1970–71-ல் ஏற்படும் தேவைகளை நிறைவு செய்ய அநேகமாகப் போதுமானது”

என்று தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் குழு முடிவு செய்துள்ளது.

உள்நாட்டு உருக்குத் தேவை 1970–71-ல் 71.25 இலட்சம் டன்னாக இருக்கும்; 1975–76-ல் அது 105 இலட்சம் டன்னுக்கும், 1980 81-ல் 150 இலட்சம் டன்னுக்கும் உயரும் எனக் குழு மதிப்பிடுகிறது.

தற்போது உள்ள உருக்கு உற்பத்திச் சக்தி 68 இலட்சம் டன்; ஆனல் விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ் 1970–71-க்கு ஏற்படும் 74 இலட்சம் தேவை சமாளிக்கப்படும்.

1975—1980-க்கும் இடையே எதிர்பார்க்கப்படும் 50 இலட்சம் டன் தேவையை நிறைவு செய்ய 1975-க்குப் பிறகு புதிய உருக்காலைகளை நிறுவவேண்டும்” எனக் குழு கூறியது.

கலக நாகர்கட்கு உதவும் சீனர்கள்

மேற்கு பர்மாவில் தங்கியுள்ளனராம்!

“நாகாலாந்து — தென் சாங் மாவட்டத்துக்கு எதிரேயுள்ள மேற்கு பர்மா பகுதியில் நிறையச் சீனர்கள் காணப்பட்டனர்” என்று நம்பகமான செய்திகள் கூறுகின்றன.

“சீனவிலுள்ள யூனன் மாகாணத்திலிருந்து கலக நாகர்கள், மேற்கு பர்மாவிலுள்ள காச்சின் மாகாணம் வழியாக நாகாலாந்துக்குத் திரும்பிப் போக அந்தச் சீனர்கள் உதவி செய்கிருர்கள்” என்று கூறப்படுகிறது.

அங்குள்ள சீனர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று திட்டமாகத் தெரியவில்லை; ‘2000 முதல் 5000 வரை இருக்கலாம்’ எனக் குறிப்பிடப்படுகிறது. அவர்களுக்கு ஆயுத வசதியும், மற்ற வசதிகளும் முழு அளவில் இருக்கின்றன.

ஆயுதம் தரித்த இந்தச் சீனர்கள், இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் என்று பீகிங் அறிவித்துள்ளது; எனினும், பர்மாவில் தனது விஷமத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களைச் சீன அங்கு அனுப்பியிருக்கக்கூடும் எனச் சந்தேகிக்க இடமிருக்கிறது.

இந்தச் சீனர்களுக்கு பர்மா காச்சின் கலகக்காரர்களிடமிருந்தும், பர்மா ‘வெள்ளைக் கொடி’ கம்யூனிஸ்டுக் கட்சியிடமிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

தமிழரின் கடும் எதிர்ப்புக் கண்டு குரல் மாறுகிறது!

இந்திப் பள்ளிகளைத் துவக்கும் திட்டமில்லையாம்!

தட்சிண பாரத இந்திப் பிரசார சபாவின் வெற்றிகரமான ‘டன்கர்க்’!

சென்னை, நவ. 12—

சென்னையில் உள்ள ‘தட்சிண பாரத இந்திப் பிரசார சபா’வின் ‘ஜனதா இந்தி வித்தியாலயா’ திட்டம், மத்திய கல்வியமைச்சுத் துறையின் ஒப்புதலுக்காகக் காத்திருப்பதாகச் செய்தியொன்று கூறுகிறது.

தமிழகத்தில் இந்தி படிக்க ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு இந்தி கற்பிப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்று அச்செய்தி கூறுகிறது.

தமிழக அரசு பள்ளிகளில் இந்தி கற்பிப்பதை அறவே நீக்கிவிட்டு, இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு எதிராகவே மேற்சொன்ன திட்டம், டில்லி அரசின் தூண்டுதலின்பேரில் இந்திப் பிரசார சபையால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

இதுபற்றி, தட்சிண பாரத இந்திப் பிரசார சபாவின் பொதுச் செயலாளரான திரு. எஸ். ஆர். சாரங்கபாணி என்பவர் ஒரு பேட்டியில் கூறியதாக, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ இதழில் வெளியாகியிருக்கும் விளக்கம் வருமாறு:—

“இந்தி கற்பிப்பதற்கெனத் தனிப் பள்ளிகள் துவக்குவதல்ல இத்திட்டத்தின் நோக்கம்!

தங்கள் உறுப்பினர்கட்கு இந்தி கற்பிக்க விரும்பும் கலாசார -- இலக்கியக் கழகங்கட்கு இந்திப் பிரசார சபா இந்தி ஆசிரியர்களைக் கொடுத்து உதவும்.

‘வித்தியாலயா’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டதால் பலர் தவருகப் பொருள் கொண்டுவிட்டனர். இந்திப் பிரசார சபாவே மாநிலத்தில் பல பள்ளிகளைத் துவக்கப்போவதாக நினைத்துவிட்டனர்.

இந்திப் பிரசார சபைக்கு இருக்கும் பொருளாதார நிலையில் இந்தி ஆசிரியர்களை வேலைககு அமர்த்தி, அவர்கட்கு எப்படி மொத்தம் ரூ. 150 சம்பளம் தர முடியும் என்று யோசித்தோம்; இந்திய அரசை அணுகி நிதியுதவி கேட்டோம்.

சென்னையில் உள்ள பல சங்கங்களிலிருந்து, ‘இந்தி ஆசிரியர்களின் பணி தேவை’ என்று கோரி நாள்தோறும் எண்ணற்றக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன.”

[தமிழக அரசின் இருமொழிக் கொள்கையால், நிரந்தரமான இந்தி ஆசிரியர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை; அவர்கட்கு அதே சம்பளத்துடன் மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஆசிரியப் பயிற்சிபெருத இந்தி ஆசிரியர்களும் பி.ஏ. பட்டம்பெற்ற இந்தி ஆசிரியர்களும் ஆசிரியப் பயிற்சி பெற அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.]

கராச்சி பல்கலைக்கழகம் மூடப்பட்டது

மாணவர்கிளர்ச்சியின் எதிரொலி

கராச்சி, நவ. 10—

பாகிஸ்தானில் மாணவர்கள் கிளர்ச்சி மூண்டுள்ளதன் காரணமாக, கராச்சிப் பல்கலைக் கழகம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகரான ராவல்பிண்டியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தின் விளைவாக மூன்று பேர் பலியானது நினைவிருக்கலாம்.

கராச்சி மாணவர்கள் அக்டோபர் மாதம் மத்தியிலிருந்தே வேலை நிறுத்தம் செய்து வந்தனர்.

அனாதையாக ஆக்கப்பட்டது இந்தி!

‘அனாதை ரட்ச’கராக மொரார்ஜி தேசாய்!

மகாராட்டிர மாநிலத்தில் ஒரு கல்லூரித் திறப்பு விழா நடந்திருக்கிறது.

விழாத் தலைவர், தமது உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தியிருக்கிருர்.

விழாவில் கலந்துகொண்ட காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவும் ஆங்கிலத்திலேயே பேசியிருக்கிருர்.

திறப்பு விழா தொடர்பான அத்தனை நிகழ்ச்சிகளும் ஆங்கிலத்திலேயே நடந்துள்ளன.

ஒரே ஒருவர்—துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் மட்டும்—இந்தியில் பேசியிருக்கிருர்!

‘ஐயோ, ஆங்கில மோகமே!’ என்று தலைப்புத் தந்து, எரிச்சலுடன் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது---‘நவபாரத் டைம்ஸ்’ என்ற இந்தி நாளேடு.

தொழில் துறை மாநாட்டிலும் இந்தி வெறியர்

சென்னை, நவ 12—

எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் தொழில் துறையினர் மாநாட்டிலும் மொழிப் பிரச்சினை தலை தூக்கியது!

வரவேற்புரையும், துவக்கஉரையும் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பட்டன.

வடநாட்டைச் சேர்ந்த சில பிரதிநிதிகள் இந்தியில் பேசினர்.

தென்னகப் பிரதிநிதி ஒருவர் தமிழில் பேசினர்.

ஆங்கிலம் தெரிந்த மத்தியப் பிரதேச பிரதிநிதி ஒருவரை ஆங்கிலத்தில் பேசுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது; ஆனல் அவர் அதற்குச் செவிசாய்க்கவில்லை!

பொருளாய்வுக் குழுக் கூட்டத்தில் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களை மீண்டும் ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டியதாயிற்று!

குழாய்களில் விடப்படும் குடிநீர் அளவு குறையாது

பெரும் மழை பெய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது

சென்னைமாநகராட்சி ஆணையர்நம்பிக்கை

சென்னை, நவ. 12—

"புழலேரியில் நீர்மட்டம் குறைவாக இருந்தபோதிலும், சென்னையில் குழாய் நீர் வழங்குவதில் வெட்டு இருக்காது.

"புழலேரி குடிநீர் நிலைமை மனநிறைவு தருவதாக இல்லையாயினும், கவலையுறத்தக்க அளவுக்கு இல்லை"

என்று மாநகராட்சி ஆணையர் ஜே. ஏ. அம்பாசங்கர் விளக்கித் தெரிவித்தார்.

பருவ மழை பொய்த்துப் பேய் விட்டதன் காரணமாக, நகருக்குக் குடிநீர் வழங்கிவரும் புழலேரியில் தண்ணீர் அளவு மிகவும் குறைந்துவிட்டது; இதன் காரணமாக, நகரில் இப்போது குழாய்களில் விடப்படும் தண்ணீரின் அளவு குறையுமா என்று கவலை பரவியுள்ளது. இது குறித்து நகராட்சி ஆணையர் மேலும் கூறியதாவது:—

'இவ்வாண்டில் புழலேரியிலுள்ள நீர்மட்ட நிலவரம் 1965-ம் ஆண்டில் இருந்தது மாதிரி இருக்கிறது.

புழலேரியின் நீர்மட்ட அளவு 45 அடி சொச்சம்; ஆனல் இப்போது பத்து அடி குறைவாக இருக்கிறது."

"இதனல் குழாய்களில் விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்படுமா?" என்று கேட்டதற்கு, 'குறைக்கப்படமாட்டாது' என்று அவர் உறுதியளித்தார்.

நவம்பர் மாதம் 26-ம் நாள்வரை மழை பெய்யக்கூடிய நாட்களே. மழை பெய்யும் தோது அடியோடு போய்விடவில்லை. அடுத்து 4 அல்லது 5 வாரங்களுக்கு இதற்குமுன்பு இரண்டு ஆண்டுகளில் நடந்தது மாதிரி பெரும் மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் நிலைமை நல்லபடி சீர்திருந்திவிடும் என்று நம்புகிறேன்."

அரசு ஊழியர்களுக்கு மருத்துவ அலவன்சு

தமிழக அரசு யோசனை

சென்னை, நவ. 11—

அரசு ஊழியர்களுக்கு 'மருத்துவ 'அலவன்சு' தருவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டு வருகிறது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு இப்போது, பணம் செலுத்தியதற்காக டாக்டர்கள் அளிக்கும் இரசீதுகள், மருந்துகள் வாங்கியதற்கான இரசீதுகள் ஆகியவற்றை வைத்து, அவர்களுடைய மருத்துவச் செலவுகள் தரப்பட்டு வருகின்றன.

இந்த மருந்துச் சீட்டுகளை சரி பார்ப்பதற்கும், நடப்பில் உள்ள முறைகளைக் கடைபிடிக்கவும், அரசுக்கு மிகுந்த செலவாகி வருகிறது; எனவே இந்தச் செலவை குறைப்பதற்காக ஊழியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை 'மருத்துவ அலவன்சா'கக் கொடுத்துவிடலாம் என்று அரசு கருதுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் ரூ. 150 அல்லது அதற்குக் குறைவாக ஊதியம் பெறுவோருக்கு மாதம் ரூ 10-ம், ரூ 150-லிருந்து ரூ. 300 வரை ஊதியம் பெறுவோருக்கு ரூ. 15-ம் கொடுக்கப்படும்; ரூ. 300-க்கும், அதற்கும் மேற்பட்ட ஊதியம் பெறுவோருக்கு ரூ 20-ம் வழங்கப்படும்.

மேலும் ஒரு ஊழியர், மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறும் செலவை, வழக்கம் போலவே அரசு ஏற்றுக்கொள்ளும்.

இந்தத் திட்டத்திற்கு இன்னும் முதலமைச்சர் ஒப்புதல் அளிக்கவில்லை.

அரசு மருத்துவர்கள்

தனியாக தொழில் நடத்த தடை வரும்

திருச்சி, நவ. 12—

"அரசு மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர்கள், தனிப்பட்ட முறையிலும் மருத்துவமனை வைத்து நடத்துகிருர்கள். இந்த முறையை ஆந்திர அரசு தடைசெய்திருக்கிறது. இதன்படி, அரசு மருத்துவமனை டாக்டர்கள், தனிப்பட்ட முறையில் மருத்துவமனை நடத்த முடியாது. இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன்.

"இது பற்றிய முழு விவரங்களையும் ஆந்திர அரசிடம் கேட்டிருக்கிறோம். இந்தத் திட்டம், தமிழகத்தில் எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது"

இவ்வாறு சுகாதார அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, செய்தியாளர்களிடம் கூறினர்.

இப்படி ஒரு மாநாடாம்!

'உலக ஆரிய மாநாடு' ஒன்று தென்னிந்தியாவில் --- ஐதராபாத் நகரில் நடைபெறப்போகிறதாம்.

இது தொடர்பாக, 'வேத பாராயண யக்ஞம்' ஒன்று துவங்கி நடந்து வருவதயும், மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகிருர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

மாநாட்டிற்கு ஓர் இலட்ச ரூபாய்ச் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மாநாட்டின் கடைசி நாளன்று, 'பசுக்கள் தினம்' கொண்டாடப்படும் என்றும் ஜகத்குரு சங்கராச்சாரியார் இதைத் துவக்கி வைப்பார் என்றும அறிவிக்கப்பட்டுள்ளது.

சாத்தூருக்கு அருகில் புதிய அணைக்கட்டு

அமைச்சர் செ. மாதவன் அடிக்கல் நாட்டினர்

விருதுநகர், நவ. 10—

சாத்தூர் அருகில் சுக்கிலநத்த கிராமத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் அணைக்கட்டிற்குத் தமிழக சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அடிக்கல் நாட்டினர்.

கேரளத்திலிருந்து தண்ணீர் பெற அந்த அரசுடன் தமிழக அரசு தொடர்புகொண்டு வருகிறது என்றும், சிணற்றுப் பாசன வசதிக்கு ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மின்சார வசதிக்கு ரூ. 3½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அமைச்சர் கூறினர்.

சாத்தூரில் ரூ. 11 இலட்சம் செலவில் ஊராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் அமைச்சர் துவக்கிவைத்தார்.

தமிழகத்துக்கு ஐந்தாவது இடமாம்!

சேலம் இரும்பு பற்றி மத்திய அமைச்சர்

ம. பி. மாநிலத்தில் பெரும் சுரங்கத் திறப்பு

கிரிண்டல், நவ. 12—

இரும்புக் கனி ஏற்றுமதி வளர்ச்சிக்கென அரசு ஒப்புக்கொண்டுள்ள ஆறு திட்டங்களில் பைலாதில்லா திட்டத்துக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய இந்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், தமிழகத்துக்கு 5-வது இடமே தரப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

பைலாதில்லாவுக்கு அடுத்தபடியாக முறையே இடம் பெற்றுள்ள திட்டங்களாவன:—பரஜமடா–ஹால்தியா; தைகேரி–பிரதீப்; பெல்லாரி–ஹாஸ்பெட்; சேலம்–தமிழ்நாடு; கோவா.

மத்தியப் பிரதேசம் பைலாதில்லாத் திட்டத்தில், ஆசியாவிலேயே மிகப் பெரிய இயந்திரத்தால் இயங்கும் இரும்புக் கனிச் சுரங்கத்தை இந்திய வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் துவக்கிவைத்தார்.

உலகில் மிக அதிக அளவில் இரும்புப் படிவங்கள் உள்ள இடங்களில் இது ஒன்று; இங்கு 300 கோடி டன் இரும்புக் கனிப் பொருள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

இங்கு ரூ. 23.5 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்ட முதல் சுரங்கத்தை அவர் முறைப்படி இயக்கி வைத்தார்.

ஜப்பானுடைய தொழில் நுட்ப இயந்திரச் சாதன உதவியுடன் இதை, தேசிய வளர்ச்சிக் கழகம் அமைத்துள்ளது

திட்டத்தின் முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 35-இலட்சம் டன்வீதம் வெட்டி எடுக்கப்படும்; அதனல் 25-முதல் 30-கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

ஜப்பானுக்கு இந்தச் சுரங்கத்திலிருந்து ஏற்கனவே 10-இலட்சம் டன் இரும்புக் கனி அனுப்பப்பட்டிருக்கிறது.

துவக்க விழாவில் திரு. தினேஷ் சிங் பேசுகையில், நான்காவது திட்ட காலத்தில் ஆண்டுக்கு 3-கோடி டன் இரும்புக் கனியை இந்தியா ஏற்றுமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுவதாகக்கூறினர்.

1962—63-ல் ஜப்பானுக்கு இந்தியா 52-இலட்சம் டன் இரும்புக் கனி ஏற்றுமதி செய்தது; 1967—68-ல் 113-இலட்சம் டன் ஏற்றுமதி செய்தது.

கி.ஆ.பெ. விசுவநாதம்

இலங்கை பயணம்

திருச்சி, நவ 10—

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், இத்திங்கள் 17-ம் நாள் விமானம் மூலம் இலங்கைக்குச் செல்லுகிருர்.

கண்டி அசோகா மாணவர் விடுதியின் 33-ம் ஆண்டு விழாவில் தலைமைவகிக்கச் செல்லும் அவர், கொழும்பு தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம், விவேகானந்தா சபை, பதுளை இந்து மகா சங்கம், காலி, கதிர்காமம், பண்டாரவளை, அட்டன்ஹைலன்ட்ஸ் கல்லூரி, நுவரெலியா முதலிய இடங்கட்கும் சென்று நவ. 24-ம் நாள் தமிழகம் திரும்புகிருர்.

நேரு நினைவு நிதி--

வடக்கத்தியர் தரும் மதிப்பு

நான்கு ஆண்டுகளாகியும் சல்லிக்காசுக்கூடத் தராத மாநிலங்கள் மூன்று

சொந்த மாநிலத்தில் ஐந்து லட்சம் மட்டுமே வசூல்!

புதுடில்லி, நவ. 12—

நேருவின் நினைவாகப் பல அறப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டுத் திரட்டப்பட்டுவரும் நினைவு நிதிக்கு, டில்லி மாநிலமும், பீகார், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களும் இதுவரையில் ஒரு காசுகூட நன்கொடையாக அளிக்கவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது.

நேரு நினைவு நிதி 1964-ல் துவக்கப்பட்டது. இந்த நிதிக்கு ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய தென்னிந்திய மாநிலங்கள்தான் அதிக அளவில் நிதி திரட்டித் தந்துள்ளன.

நேரு நினைவு நிதிக்கு அதிக அளவு நிதி திரட்டித் தந்த மாநிலங்களின் பட்டியலில் ஆந்திரம் முதலிடமும், தமிழ்நாடு இரண்டாவது இடமும், கேரளம் மூன்ருவது இடமும் வகிக்கின்றன.

நேருவின் சொந்த மாநிலமான உத்தரப் பிரதேசம் இந்த நினைவு நிதிக்கு ரூ. 5-இலட்சம் மட்டுமே திரட்டிக் கொடுத்திருக்கிறது.

ஆந்திரம் ரூ. 43-இலட்சமும், தமிழ்நாடு ரூ. 38-இலட்சமும், கேரளம் ரூ. 38-இலட்சத்துக்கு சிறிது குறைவாகவும், மகாராட்டிரம் ரூ 36-இலட்சமும், மைசூர் ரூ. 16-இலட்சமும், மேற்கு வங்கம் ரூ 10-இலட்சமுமாக இந்த நினைவு நிதிக்கு நன்கொடை வழங்கியுள்ளன.

இதுவரையில் நேரு நினைவு நிதிக்கு மூன்றரைக் கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது.

மாநிலத் தமிழாசிரியர் 11-வது மாநாடு

இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைப்பார்

சென்னை, நவ. 11—

டிசம்பர் இறுதி வாரத்தில் புலவர் ந. துரைசாமி எம் ஏ. தலைமையில் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் பதினேராம் மாநாட்டினைத் தொடக்கிவைக்க, கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இசைந்துள்ளார்கள்.

மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் பொதுச்செயலாளரும் சென்னைத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவருமான பேராசிரியர் அன்பு கணபதி தலைமையில் சென்னைப் பச்சையப்பன் உயர் பள்ளியில் நடந்த ஆட்சிக் குழுக் கூட்டத்தில், மாநாட்டிற்கான, பேராசிரியர் -- புலவர் நாற்பத்தொன்பதின்மர் கொண்ட வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

திரு. ம. கி. தசரதன் எம்.ஏ. வரவேற்புக் குழுத் தலைவராகவும், புலவர்கள் இரா. திருஞானசம்பந்தம், மி. ச. நடேசன் இருவரும் மாநாட்டுச் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அமைச்சர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன் ஆகியோரை அழைப்பது எனவும், காலை நிகழ்ச்சியில் டாக்டர் அ. சிதம்பரநாதன், மயிலை சிவமுத்து இருவரின் படங்களைத் திறப்பது என்றும், மாலையில் அறிஞர் பலரை அழைத்து 'கல்லூரிகளில் பயிற்றுமொழி' பற்றிக் கருத்தரங்கு ஒன்று நடத்துவது எனவும் முடிவுகள் செய்யப்பெற்றன.

திருச்சி பொறியியல் கல்லூரி

திருச்சி, நவ. 11—

திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியின் நிர்வாகக் குழுத் தலைவராகக் கல்வி--தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

திட்டக் குழுவின் இலக்கு நிறைவேருது

தேசிய வருமான ஆய்வுக் கழகத்தின் கருத்து

நான்காம் திட்ட இறுதியில் நிலவரம் பற்றி மதிப்பீடு

"1970--71-ல் முடிவடையும் ஐந்து ஆண்டுகளுக்கு நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆண்டுக்கு சராசரி 3.1 சதவிகிதமாக இருக்கும்; அதற்குப் பிறகு ஐந்துஆண்டுகளில் 4.2 சதவிகிதமாக இருக்கும்"

என்று தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

நான்காவது திட்ட காலத்தில் 5 சதவிகித பொருளாதார வளர்ச்சி இருக்கவேண்டும் என்று திட்டக் குழு வற்புறுத்தியிருக்கிறது; எனவே, தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகக் கருத்துப்படி வளர்ச்சி விகிதத்தில் குறைவு ஏற்படும் என்று ஆகிறது.

வேளாண்மைத் துறையில் சுமார் 25 சதவிகிதமும், தொழில் துறையில் 7 முதல் 8 சதவிகிதம் வரையிலும் வளர்ச்சி இருக்கும் என்று ஆராய்ச்சிக் கழகம் கணக்கிட்டிருக்கிறது.

மொத்தமாகச் சேர்த்துக் கணக்கிட்டால் மேலே கூறியபடி 1970–71-ல் முடியும் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு 3.1 சதவிகிதமும், அதற்குப் பிறகு 4 2 சதவிகிதமும்தான் இருக்கும்.

"மூன்ருவது திட்டத்தின் கடைசி இரண்டு ஆண்டுகளிலும், அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளிலும் பொருளாதார நடவடிக்கைகள் மந்தமாக அமைந்துவிட்டதால் மேலே குறிப்பிட்ட விகிதத்திற்குமேல் வளர்ச்சியை எதிர்பார்ப்பது கடினம்" என்று ஆராய்ச்சிக் கழகம் கூறுகிறது.

அடுத்து வரும் ஆண்டுகளில் அதிக வளர்ச்சி விகிதம் காண்பதற்குள்ள வாய்ப்புகள் பற்றிக் குறிப்பிடுகையில், பெரிய முதலீடுகளுக்கான நிதி வசதிகளைத் தற்போது திரட்டுவது மிகவும் கடினம் என்று தோன்றுவதாக ஆராய்ச்சிக் கழகம் கூறுகிறது; அடுத்த பத்தாண்டுகளில் இதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1966–67 முதல் 1970–71 முடிய ஐந்து ஆண்டுக் காலத்தில் சுமார் ரூ. 13,550 கோடி முதலீடும், அதற்கு அடுத்த ஐந்து ஆண்டுக் காலத்தில் சுமார் ரூ. 20,200 கோடியும் தேவைப்படலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதிக முதலீடுகளுக்கான வாய்ப்புகள் அதிகரிக்குமானல், பொருளாதார வளர்ச்சி விகிதமும் அதிகரிக்கும்.

"1960 61-ல் ரூ. 13,526 கோடியாக இருந்த தேசிய வருமானம், 1970–71-ல் ரூ. 19,660 கோடியாகவும், 1975–76-ல் ரூ. 24,190 கோடியாகவும் உயரும்"

என்று ஆராய்ச்சிக் கழகம் கணக்கிட்டிருக்கிறது.

குறைபாடுகள் நீங்கி நிறைபாடுடைய சமுதாயம் உருவாகுவது அவசியம்

சமுதாய முன்னேற்றத்தில் மாணவர்கள் பங்கு

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, நவ, 12—

"சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் பல்வேறு குறைபாடுகளை நீக்கி நாட்டை முன்னேறச்செய்யும் கடமை, படித்த தலைமுறையினருக்கு இருக்கிறது; அக்கடமையைச் செய்ய மாணவர்கள் தங்கள் இளம் பருவத்திலிருந்தே தொண்டுள்ளம் பெறப் பயிற்சி பெற வேண்டும்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சட்டக் கல்லூரி மாணவர்கள் அமைத்துள்ள சமூகப் பணி மன்றத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் விளக்கிக் கூறியதாவது :—

"நமது நாட்டில் அறியாமை, வறுமை, பிணியுடைமை, எல்லாவற்றிலும் அலட்சியப் போக்கு ஆகிய குறைபாடுகள் மக்களிடையே இருக்கின்றன; இக்குறைபாடுகளை அகற்றி நிறைபாடுகள் உள்ள சமுதாயத்தை உருவாக்குவது கற்றவர்களின் நீங்காக் கடமையாகும்.

"மாணவர்கள் சமூகத் தொண்டு புரிய முன்வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

"பிறருக்குத் தொண்டு செய்வதற்கும், தொண்டுள்ளத்தைத் தனக்குத்தானே வளர்த்துக் கொள்ளவும், கல்லூரி - பள்ளிப் பருவத்திலிருந்தே பயிற்சியும் பழக்கமும் எதிர்காலத் தலைமுறையினரான மாணவர்கள் பெறுவது மிகவும் பயன் தரும். சமுதாயம் மேன்மையடைய இப்பயிற்சி மிகமிகத் தேவையாகும்."

மாணவர்களின் சீரிய முயற்சியைப் பாராட்டி திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி மனிகா டேவிட் ஆகியோரும் பேசினர்.

சமூகப் பணி மன்றத்தின் செயலாளர் எஸ் டி இராசா அனைவரையும் வரவேற்றார்.

துணைத் தலைவர் பி.வி.எஸ். செயராசு நன்றி கூறினார்.

புதுக்கோட்டை தனி மாவட்டமாகும்?

திருச்சி, நவ 12—

திருச்சி மாவட்டம் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றிப்பு சார்பில், அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களுக்கு வரவேற்புத் தரப்பட்டது.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் அமைச்சர் மதியழகன் குறிப்பிட்டதாவது :—

"தமிழகத்திலுள்ள பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பது குறித்துத் தமிழக அரசு ஆய்ந்து வருகிறது.

"இதன்மூலம் கலெக்டர்களுக்கு வேலைப் பளு குறையும்; நிர்வாகமும் நல்ல முறையில் நடைபெறும்.

"முதல் கட்டமாகத் திருச்சி மாவட்டத்தை, 'திருச்சி மாவட்டம்'--'புதுக்கோட்டை மாவட்டம்' என இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பது பற்றிப் பரிசீலனை நடைபெற்று வருகிறது."

பார்க்பேர் பொருட்காட்சி-1968-69

எஸ். ஐ. ஏ. ஏ. திடல் --- சென்னை-3.

(மூர் மார்க்கெட் பின்புறம்)

ஆதரவாளர்கள் உடனே இடத்திற்கு விண்ணப்பிக்கவும்

ஸ்டால்கள் கட்டவும், எலெக்ட்ரிக் வேலைகள், ஒலிபெருக்கி அமைப்பு முதலிய உரிமைகளுக்கு 15—11—68-க்குள் டெண்டர்கள் கோரப்படுகின்றன.

சிற்றுண்டிசாலை நடத்துதல், சைக்கிள் ஸ்டாண்ட் அமைத்தல், குளிர்ந்த பானம், சோடா கலர், ஐஸ்கிரீம், வெற்றிலை பாக்கு, பீடி, சிகரெட் மற்றும் பல விற்பனை முதலியவைகளுக்கு ஏகபோக உரிமை 17—11—68 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்குமேல் பொருட்காட்சி அலுவலகத்தில் ஏலம் விடப்படும்.

T.C. & B.C. வேலைகளுக்கு முன்பணம் கட்டக்கூடியவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

அசன் அலி
ஆர். புருஷோத்தமன் பி.ஏ.பி.எல்.
கௌரவ காரியதரிசிகள்

கே. கோவிந்தசாமி
(முன்னாள் நகரமன்ற உறுப்பினர்)
ஆர்கனைசர்

சி. சிட்டிபாபு எம்.பி.
ஆர்கனைசிங் செகரட்டரி

தொலைபேசி எண் : 37788

இலண்டனில் சத்தியவாணிமுத்து

பிரிட்டிஷ் அமைச்சகம் விருந்தளித்தது

இலண்டன், நவ. 12—

ஒருவார கால சுற்றுப்பயணம் செய்வதற்காக இலண்டன் வந்திருந்த தமிழகத் தகவல்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து, பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரை (திரு. ஷெப்பர்டு) சந்தித்து, தமிழகத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

சென்ற வாரக் கடைசியில் அநேகமாக ஒரு நாள் முழுவதும் பிரிட்டிஷ் நாடாளுமன்றக் கூட்டங்கள் நடைபெறுவதைக் கவனித்த திருமதி சத்தியவாணிமுத்துவுக்கு, வெளியுறவு—காமன்வெல்த் அமைச்சக சார்பில் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது; இலண்டன் சுற்றுப்பயண முடிவில் தமிழக அமைச்சரை கௌரவிக்கும் முறையில் இந்த விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலண்டனில் அமைச்சரின் கடைசி நிகழ்ச்சி இதுதான். நவம்பர் 9-ம் நாள் அமைச்சர் இலண்டனைவிட்டுப் புறப்பட்டார். தாயகம் திரும்புமுன் பிரான்சு, இத்தாலி நாடுகளுக்கும் செல்கிறார்.

செய்தி--விளம்பரத் துறை பற்றித் தகவல் சேகரிப்பு

பிரிட்டிஷ் அரசாங்கச் செய்தி விளம்பரத் துறைக்குச் சென்றிருந்த திருமதி சத்தியவாணிமுத்து, செய்தித் துறைச் சீரமைப்பு விவரங்களைச் சேகரித்துக் கொண்டுள்ளார்.

"பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செய்தித் துறையாகவும், விளம்பரப் பிரிவாகவும் செயல்பட்டு வருவது மத்திய தகவல் நிலையம்; இங்கு சென்றிருந்த நான், அரசாங்கத் தகவல்கள் எப்படிச் சீராக ஒருங்கிணைக்கப்பட்டு விளம்பரப் படுத்தப்படுகிறது என்பதையும், இந்த வகையில் டெலிவிஷன், சினிமா, மற்றும் பத்திரிகைகளின் பங்கு பற்றியும் அக்கறையுடன் கவனித்தேன்; இங்குள்ள நிர்வாகிகளுடன் இது பற்றிக் கலந்து பேசினேன்; நேர்த்தியான முறையில் இந்த நிலையம் இயங்கிவருவதால், இதே முறையைப் பின்பற்றித் தமிழகத் தகவல் துறை சீரமைப்புக்கு முயலுவேன்" என்றார் திருமதி சத்தியவாணிமுத்து.

ஊனமுற்றோருக்கு வேலை

இலண்டனில் ஊனமுற்றோருக்கான மறுவாழ்விப்பு நிலையம் ஒன்றிற்கும் அமைச்சர் சென்றார். எப்படி ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காக அரசாங்கம் வேலைவாய்ப்புத் தந்து உதவி புரிகிறது என்பதை நேரில் கண்டறிந்த அவர், 'இதே போல், தமிழகத்திலும் குறைந்த அளவிலாவது அரசாங்க வேலை வாய்ப்புக்களை ஊனமுற்றோருக்காக ஒதுக்கும் திட்டம் ஒன்றைத் துவக்குவது பற்றி முயற்சி மேற்கொள்வேன்' என்றார்.

இலண்டன் மாநகராட்சியின் சுகாதார நிலையத்துக்கு திருமதி சத்தியவாணிமுத்து வந்திருந்தார்; குடும்பக் கட்டுப்பாடு எப்படி இங்கெல்லாம் வலியுறுத்தப்படுகிறது என்பதை அறிந்துகொண்டார் அமைச்சர்; 'பிரிட்டனில் திருமண வயது மிகவும் அதிகமாக இருப்பதால் பிறப்பு விகிதம் அதற்கேற்ப குறைவாக உள்ளது; குடும்பக் கட்டுப்பாடு இதனாலும் வெற்றிகரமாகச் செயல்படுகிறது' என்று அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

சென்னை --- இராயபுரம் அண்ணா நற்பணி மன்றம்

சென்னை—இராயபுரம் அண்ணா நற்பணி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு :—

அவைத் தலைவர் : வி. கோபால்; செயலாளர் : கே. பாலு; துணைச் செயலாளர் : கே. இராசு; பொருளாளர் : என். சண்முகம்; செயற்குழு உறுப்பினர்கள் : தி. ந. மதிவாணன், ஆர். எல். லிங்கராஜ், நெடுமாறன், பிச்சாண்டி, துளசிங்கம், ஆனந்தன், பழனி, இராமானுசம், கந்தசாமி, ஜான். எஸ். சிவநேசன், ஞா. கே. மிக்கேல், பூபதி.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் இலவச மருத்துவ வசதி

திருச்சி, நவ. 12—

"அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இலவச மருத்துவ உதவி விரிவுபடுத்தப்படும்; இத்திட்டத்தின் விவரங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன"

என்று, நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அண்ணா உடல்நிலை முன்னேறுகிறது

இலாகாப் பொறுப்புக்களை ஏற்றார்

சென்னை, நவ. 12—

அண்ணா அவர்களின் உடல் நிலை படிப்படியாக முன்னேறி வருகிறது; டாக்டர் சதாசிவம் அவர்கள், வழக்கம் போன்று அவரது உடல் நிலையைப் பரிசோதனை செய்து வருகிறார்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தம்முடைய இலாகாப் பொறுப்புக்களை மீண்டும் ஏற்றுக் கொண்டார்.

சிகிச்சைக்காக அண்ணா நியூயார்க் சென்றிருந்தபோது, அவருடைய இலாகாப் பொறுப்புக்கள், மற்ற அமைச்சர்களிடம் வழங்கப்பட்டிருந்தது நினைவிருக்கலாம்.

பெரியார் சந்திப்பு

சென்னை, நவ. 11—

திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள், இன்று அண்ணா அவர்களைச் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

அவருடன் 'விடுதலை' ஆசிரியர் கி. வீரமணியும் வந்திருந்தார்.

மருத்துவச் செலவுக்கு அந்நியச் செலாவணி

"அமெரிக்காவில் சிகிச்சை பெறுவதற்காகத் தமிழக முதலமைச்சருக்கு அனுமதிக்கப்பட்ட அந்நியச் செலாவணி 8,125 டாலர்கள் (சுமார் ரூ. 61,000) ஆகும்"

என்று மக்களவையில், ச. சோ. உறுப்பினர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் தெரிவித்தார்.

சந்திரனை நோக்கி ராக்கெட்!

மாஸ்கோ, நவ. 12—

சந்திரனை நோக்கி 'ராக்கெட்' ஒன்றை இரஷ்யா ஏவியிருக்கிறது.

இந்த ராக்கெட்'டில் வான வெளி வீரர் எவரும் இல்லை.

இது சந்திரனைச் சுற்றிப் பறந்து, பின்னர் பூமிக்குத் திரும்பும்.

இந்தியாவின் புதிய பிரிட்டிஷ் தூதுவர்

அண்ணாவைச் சந்திக்கிறார்

புதுடில்லி, நவ. 12—

இம்மாதம் 6-ஆம் நாள் இந்தியக் குடியரசுத் தலைவரிடம் பதவிப் பத்திரங்களை அளித்து இந்தியாவில் புதிய பிரிட்டிஷ் தூதராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ள சர். மாரிஸ் ஜேம்ஸ், இன்று சென்னைக்கு வருகிறார். பதவி ஏற்ற ஒரு வாரத்தில் புதுடில்லிக்கு வெளியே அவர் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுதான்.

இன்று பகல் 12-45 மணிக்கு விமானம்மூலம் சென்னை வந்து சேரும் அவருடன், அவரது மனைவியும் வருகிறார்.

சென்னையில் தங்கியிருக்கையில் சர் மாரிஸ் ஜேம்ஸ், முதலமைச்சர் அண்ணா பிற அமைச்சர்கள், திரு. சி. இராசகோபாலாச்சாரி ஆகியோரைச் சந்திப்பார்.

புதன்கிழமையன்று தமிழக அரசு அவருக்கு விருந்தளிக்கிறது; அன்று மாலை அவர் சென்னையில் உள்ள முக்கிய பத்திரிகையாளர்களைச் சந்திக்கிறார்; அத்துடன் சென்னையில் உள்ள பிரிட்டிஷ் வணிகப் பெருமக்களையும் அவர் சந்திக்கிறார்.

பிரிட்டிஷ் தொழில் நுட்ப உதவியின்கீழ் கிண்டியில் இயங்கிவரும் தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் அவர் செல்வார்; அதன் பிறகு அம்பத்தூரில் உள்ள டி. ஐ. சைக்கிள் தொழிலகத்திற்குச் செல்வார்.

வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விமானம்மூலம் புதுடில்லிக்குப் புறப்படுகிறார்.

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் விளம்பரம்

மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் அதன் உறையில் 'தமிழக மின்சார வாரியம் -- எண்ணூர் அனல் மின் திட்டம்' கீழ்க்கண்ட வேலைகளுக்குக் கீழ்க் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் கீழ்க் குறிப்பிட்டுள்ள நேரம், தேதியில் பெற்றுக்கொள்ளப்படும்.

எண்	குறிப்பு எண்	வேலை விபரம்	பிணைத் தொகை	டெண்டர்பெற்றுக் கொள்ளப்படும் நேரம் தேதி
1.	SCE. 100	சாம்பல் கொட்டும் குழாய்களைத் தாங்கும் இரும்புத் தூண்களுக்குத் தேவையான விற்பனைத் தரமான இரும்பை அளித்து, உருவாக்கி நிறுத்தல்.	ரூபாய் 2,000	27—11—68
2.	SCE. 101	சாம்பல் கொட்டும் குழாய்களைத் தாங்கும் தூண்களுக்கு அஸ்திவாரத்துக்கு இரும்புக் கம்பிகளுடன் கூடிய சிமெண்டு காங்க்ரிட்டும், சாதாரண சிமெண்டு காங்க்ரிட்டும் போடுதல்	ரூபாய் 500	27—11—68

டெண்டர்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். பிணைத் தொகை செலுத்தப்படாத டெண்டர்களும், துறையினரைச் சார்ந்த நமூனாக்களில் இல்லாத டெண்டர்களும், இறுதித் தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்களும் திட்டமாக நிராகரிக்கப்படும்.

டெண்டர் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 (ரூபாய் பத்து மட்டும்) கீழ்க் கையொப்பமிடப்பட்டவர் அலுவலகத்தில் நேராகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ குறிப்பிட்ட டெண்டர் எண்ணுக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் டெண்டர் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

டெண்டர்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை டெண்டர்தாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

டெண்டர் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

தொலைபேசி எண் : 59389
தந்தி : 'ENTERMAL'

தலைமை நிர்மாணப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.